# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


**எழுத்தாளர் கவனத்திற்கு!**

காவலன் கிறிஸ்மஸ் மலருக்கான கவிதைகள், கதைகள், கட்டுரைகளை வரவேற்கிறேம். அனுப்புவோர் இம்மாதம் 15-ம் தேதிக்கு முன்பதாக எமது அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கவும்.

ஆசிரியர்.


94-ம் புத். | 1969-ம் ஆண்டு மார்கழி மாதம் 6-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 47-ம் இல.


"திருச்சபைமீது நம்பிக்கைகொள்ளுங்கள்"

# திருத்தந்தையின் அறைகூவல்

திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் ஐப்பசி 21ஆம் நாள் மக்களுக்கு அளித்த ஒரு பொதுப் பேட்டியின் பொழுது, கத்தோலிக்க மக்கள் அனைவரும் திருச்சபைமீது அசையாத நம்பிக்கை கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். சீர்திருத்தம், மறுமலர்ச்சி போன்ற கவர்ச்சிமிக்க சொற்களால் ஈர்க்கப்பட்டு, திருச்சபையைப் பழித்துக் குறைகூறி எல்லாவற்றையும் அழித்துச் சிதைக்கும் சிலர் போக்கை திருத்தந்தை வன்மையாகக் கண்டித்தார்.



**பழமைப் போக்கு அன்று; உண்மை உணர்வுதான்**

"திருச்சபை என்பது ஒவ்வொருவனும் தன் விருப்பப்படி மாற்றியமைக்கக்கூடிய ஒரு சமூக நிறுவனமோ, வரலாற்று இயக்கமோ அன்று.

திருச்சபையை உருவாக்குவது விசுவாசம், அதை ஆண்டு நடத்தும் அதிகாரம் ஒன்றுண்டு; அதற்கு உயிர் ஊட்டுவது பரிசுத்த ஆவி, எனவே திருச்சபைமீது நம்பிக்கை கொள்ளுங்கள். திருச்சபை தற்போது எவ்வாறு அமைந்திருக்கிறதோ அவ்வாறே அதன்மீது நம்பிக்கை கொள்ளுங்கள். இவ்வாறு நம்பிக்கைக் கொள்வது பழமைப் போக்கு என்றே, முன்னேற்றமின்மையென்றே எண்ண வேண்டாம். இது உண்மை நிலையை உணர்வதும் மதிப்பதுமாகும்" என்றார் திருத்தந்தை.

**மறுமலர்ச்சி என்னும் மாயச் சொல்**

"திருச்சபையை நாம் நம்பலாம் என்பதை அது நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. விசுவாச உண்மைகளுக்கும், அறநெறிக்கும், தன் அடிப்படை அமைப்புகளுக்கும், வரலாற்றில் தான் கண்ட முன்னேற்றத்திற்கும் திருச்சபை எப்பொழுதுமே பிரமாணிக்கமாயிருந்து வருகிறது. மறுமலர்ச்சி என்னும் மாயச் சொல்லைக் கேட்டு சிலர் எல்லைமீறிச் சென்றுவிடுகிறார்கள். செய்யவேண்டிய சீர்திருத்தத்தை அவசரமாகச் செய்யவேண்டுமென்று சிலர் துடிப்பதால் திருச்சபையைப் பழித்துக் குறைகூறி தங்களையே அழித்துச் சிதைத்துவிடத் துணிகிறார்கள்" என்று கூறி திருத்தந்தை தம் கவலையைத் தெரிவித்தார்.

—சர்வவியாபி.

## அங்கிளிக்கன்சபைப் பாதிரிமார் கருதினலுடன் சம்பாஷணை

சென்ற வாரம் இங்கிலாந்துதேச கருதினல் ஹீனனைத் தரிசிக்க 50 அங்கிளிக்கன்சபைப் பாதிரிமார் கூட்டாகச் சென்றிருந்தனர். இவர்கள் தமது சமயத்துக்குச் சேர்ந்த "திருக்குருசு" பக்திச்சபைக்குச் சேர்ந்தவர்கள். இங்கிலாந்திலே மெதடிஸ் சபையினரும் அங்கிளிக்கன் சபையினரும் ஒன்றுசேரும் இயக்கம் ஒன்று இருக்கிறது. இந்த இயக்கத்தை இக் கூட்டத்தினர் விரும்பவில்லை. ரோமன் கத்தோலிக்கருடன் ஒன்றுசேருவதையே அவர்கள் விரும்புகிறார்கள். பாப்பரசருடைய தலைமையையும் அவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் தமது நாட்டிலே சுயேச்சையான திருச்சபை இருப்பதே அவர்களது பிரதான ஆவல். இது விஷயங்களைப்பற்றி இவர்கள் கருதினல் ஹீனனுடன் சம்பாஷித்துக்கொண்டனர்.

## கிறிஸ்தவ சபைகளின் கூட்டு விண்ணப்பம்

பின்தங்கிய நாடுகளிலுள்ள வறுமையை அகற்ற முன்னிலும் கூடிய முறையில் இங்கிலாந்து தேசம் உதவவேண்டுமென்று அத்தேசத்திலுள்ள பெரும்பாலான கிறிஸ்தவ சபைகள் ஒன்றித்து பாராளுமன்றத்தவருக்குச் சமர்ப்பிக்க ஒரு விண்ணப்பம் தயாரித்து வருகின்றார்கள். ஆகமன கால முதல் ஞாயிறு றொடக்கமாக, மார்கழி மாதம் முழுவதும் வழிபாட்டுக்குச் செல்கின்ற யாவரும் கையொப்பமிட விண்ணப்பப் பத்திரங்கள் தயாராகிவிட்டன. இப்பத்திரங்களை நாட்டில்சுமார் 7000 கோவில்களில் மக்களுக்கு உபயோகத்துக்கு வைக்கப்படும்.

## அர்ச்சியசிட்ட பட்டம் சூட்டத் தருணம் இதுவே

"ஆங்கில வேதசாட்சிகள் 40 பேர் தமது உயிரை பரிசுத்த பாப்பரசரின் தலைமையை நிலைநாட்டவே அன்று ஈந்தனர். ஆகவே பரிசுத்த தந்தையின் தலைமையை அகற்றிவிடச் சிலர் முயற்சி செய்யும் இக்காலமே அந்த வேதசாட்சிகளுக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் சூட்டி மகிமைப்படுத்துவதற்கும் ஏற்ற தருணம்" என ஆங்கில கருதினல் ஹீனன் வத்திக்கானை விட்டு அண்மையில் தனது நாடு திரும்பியபோது பாப்பரசருக்குத் தாம் எடுத்துக் கூறியதாக அவர் அண்மையில் வெளிவிட்ட நிருபத்தில் அறிவித்திருக்கிறார்.

## கிறிஸ்துவ மக்களுக்கு திருத்தந்தை வேண்டுகோள்

ஐப்பசி 28ஆம் நாள் திருத்தந்தை அளித்த பொதுப் பேட்டியில் கிறிஸ்துவோடுள்ள ஒன்றிப்பு மறுமலர்ச்சிக்கு இன்றியமையாதது என்பதை விளக்கினர்:

"நாம் தம்மோடு ஒன்றித்திருப்பது மிகவும் முக்கியம் என்பதைக் கிறிஸ்துநாதர் தம்கடைசிவார்த்தைகளால் மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டினர். "என் அன்பில் நிலைத்திருங்கள்" என்று கிறிஸ்து கூறும் வார்த்தைகளைப் பற்றி கவனமாக, அமைதியாகச் சிந்தித்து பார்ப்போம். "நிலைத்திருங்கள்" என்னும் சொல் கிறிஸ்து வழக்கமாகப் பயன்படுத்திய சொல். புனித அருளப்பர் எழுதிய நூல்களில் இச்சொல்லை அடிக்கடி காணலாம்...67முறை இச்சொல் காணப்படுகிறது என்று ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். புனித அருளப்பர் தம் நற்செய்தியில் மட்டும் 40முறை இச்சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்.

திருச்சபைக்குப் புத்துயிர் ஊட்ட விரும்பினல் கிறிஸ்துவுக்கும் நமக்குமிடையே நெருங்கிய ஒன்றிப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். நமது அன்பை வளர்த்துத்தான் ஒன்றிப்பை வலுப்படுத்த வேண்டும். அருளினல் ஊட்டம் பெற்று இந்த அன்பை நாம் வளர்க்க வேண்டும்."

"கத்தோலிக்க பெண்களே, உங்களுடைய பெருமூச்சுக்கள் ஒரு குருவின் இதயத்தை உண்டு பண்ணக் கூடியதாகத் தாய்மாருக்குரிய உங்கள் இருதயங்கள் தேவசிநேகத்தினல் போதியமட்டும் பற்றியெரிவதில்லை. ஆம், உங்களது குடும்பங்கள் தியாகஞ் செய்வதற்கான மனேதைரியத்தைக் கொண்டிருக்கும்படியும், கடவுளைப்பற்றி மக்களுக்குப் பேசுவதற்கும், உலகின் ஒளியாகப் பிரகாசிப்பதற்கும், பலிபீடத்திலே அவருக்குச் சேவைசெய்வதற்குமாக ஓர் அப்போஸ்தலர் உங்களிடமிருந்து பிறக்கும்படியும் கடவுளை இரந்து கேளுங்கள்"

கர்தினல் பேர்மில்லோ.

## பாப்பரசரின் இலங்கைத் தூதுவர் பதவி உயர்வு பெற்றிருக்கிறர்

1967ஆம் ஆண்டுவரையும் இலங்கையும் இந்தியாவும் திருச்சபையின் ஒரேபிரிவாக இலங்கி பாப்பரசரின் ஒரே ஸ்தானிகரின் பிரிவாக விளங்கி வந்தன. ஆனல் அதன்பின் இந்தியா பிறிதாகவும் இலங்கை பிறிதாகவும் பிரிக்கப்பட்டு வெவ்வேறு தூதுவர்கள் கடமையாற்றி வந்தனர். முன்னட்களில் போல இலங்கையின் தூதுவர் ஸ்தானிகரின் விசேஷ கௌரவம் பெறவில்லை. ஆனல் திரும்பவும் இக் கௌரவம் இலங்கைத் தூதுவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சென்ற இருவருடங்களும் தூதுவர் பதவியில் தொண்டாற்றிய மொன்சினியோர் ஸ்ரெறே அடிகளாரே ஸ்தானிகர் பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிறர். விரைவில் இவருக்கு ஆயர்பட்டமும் சூட்டப்படும்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையை உணர்ந்தோம்

(புதிய பூசைப்புத்தகம் பற்றிப் பாப்பரசர் வரைந்த நிருபம்)

1570ஆம் ஆண்டு புனித பாப்பு 5ஆம் பத்திநாதர் திரிதெந்தீன் திருச் சங்கத்தின் வழியாக முதல்முறையாகத் திருப்பலிப் புத்தகத்தை (Roman Missal) அங்கீகரித்தார். கடந்த 4 நூற்றூண்டுகளாகக் கிறிஸ்துவின் திருச்சபைக்கு எண்ணற்ற நன்மைகளை அது புரிந்துள்ளது. இலத்தீன் ரீதியிலுள்ள குருக்களுக்கு அது கோடியாகச் சில ஒழுங்கு முறைகளை அமைத்துக் கொடுத்தாலும் நற்செய்தியின் தூதுவர் பலர் இதன் பெருமையைத் திக்கெட்டும் ஏந்திச் சென்றனர். இதில் அமைந்துள்ள செபங்களையும் வாசகங்களையும் கற்றுத் தங்களுடைய ஆன்மீக வாழ்வை முன்னேற்றிக்கொண்ட வரும் பலராவர்.

## தேவையை உணர்ந்தோம்

அன்றிலிருந்தே தேவபராமரிப்பின் தூண்டுதலால் திருவழிபாட்டு மறுமலர்ச்சி மக்களின் உள்ளங்களில் இயங்கிக்கொண்டே வந்திருக்கிறது. இம் மறுமலர்ச்சி எண்ணத்தை மக்களிடம் கண்ட பாப்பு 12ஆம் பத்திநாதர் பரிசுத்த ஆவியின் ஏவுதல் இன்றைய மக்களின் உள்ளங்களில் செயல்படுகிறது என்பதற்கு இதுவே அடையாளம் என்று குறிப்பிடுகிருர். பழைய திருப்பலிப் புத்தகமானது திருத்தியமைமக்கப்பட்டுப் பயனுள்ளதாக்கப்பட வேண்டும் என்ற ஆர்வமும் பிறந்தது. இப் பணியைத் தொடங்கிய பாப்பு 12ஆம் பத்திநாதர் புனித வாரச் சடங்குகளில் சிறப்பாகப் பாஸ்கா திருவிழிப்புச் சடங்குகளில் முக்கிய மாற்றங்களை உருவாக்கி இன்றைய மனிதனின் சிந்தனைக்கேற்ப திருப்பலிப் புத்தகத்தைப் புதுப்பித்த முதற்கட்டத்தை நம்மில் எவரும் மறந்துவிடவில்லை.

## மறுமலர்ச்சி பிறந்தது

இதையடுத்துப் பிறந்தது தான் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் மலர்ந்த திருவழிபாடுபற்றிய கொள்கைத்திரட்டு. இங்குதான் திருப்பலிப் புத்தகத்தைத் திருத்தியமைக்கும் சீரிய பணிக்கு அடித்தளமிடப்பட்டது. அதாவது; "திருப்பலியின் செபங்கள் சரியாகக் குறித்துக்காட்டும் புனித நோக்கங்களை மக்கள் எளிதில் உணர்ந்துகொள்ளும் வகையில் அச் செபங்களையும் வழிபாட்டு முறைகளையும் வரையறுத்து மாற்றியமைத்தல்; அத்தோடுபலியின் பல்வேறு பாகங்களையும் ஒரே செயலாகக் குறித்துக் காட்டும்வகையில் அவ் வழிபாட்டு முறைகளுக்கிடையே ஒரு சீரிய தொடர்பை உருவாக்கி விசுவாசிகள் நல்ல முறையில் பங்குகொள்ள உதவிபுரிதல்; வேதாகமத்திலே ஆன்மீகவாழ்வின் ஊற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வார்த்தை வழிபாட்டை அமைத்தல்; கூட்டுப்பலிக்கென்ற ஒழுங்கு முறைகளையும் வகுத்து இத் திருப்பலிப் புத்தகத்தோடு சேர்த்தல்"—போன்ற கருத்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தற்செயலாக எழுந்ததல்ல

இருப்பினும் திருப்பலிப் புத்தகத்தைத் திருத்தியமைக்கவேண்டிய எண்ணமானது ஏதோ தற்செயலாக எழுந்தது என்று எவரும் கருதிவிடக்கூடாது. கடந்த 4 நூற்றூண்டுகளாகத் திருவழிபாட்டுக் குழுவினர் இதுபற்றிச் செய்துவந்த ஆராய்ச்சியின் முன்னேற்றமே இதன் விளைவு. 5ஆம் பத்திநாதர் கூறுவதுபோல், வத்திக்கான் நூலகத்திலும் மற்றும் பல்வேறு இடங்களிலும் கிடைக்கப்பெற்ற பழங்காலச்செய்திஏடுகள் இம் முயற்சிக்குப் பெரிதும் துணையாயிருந்தன. இவ் ஆராய்ச்சியின் விளைவினுல்திருவழிபாடுபற்றிய பல்வேறு மூலநூல்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இத்தகைய முயற்சியே இன்று கிறிஸ்தவர்களின் சிந்தனையையும் ஆன்மாவையும் தூண்டவல்ல திருவழிபாட்டுமுறை அமைக்கப்படுவதற்குக் காரணமாயிற்று.

இப்போது திருப்பலிப் புத்தகத்தின் புதிய பதிப்பை ஓரளவு ஆராய்வோம். முதலில் இப் புத்தகத்தின் முன்னுரையாக அமையும் பொது அறிவுரையில் திருப்பலி நிறைவேற்றும் புதிய முறையையும், பலியில் பங்குபெறுவோரின் கடமைகளையும், திருப்பலிக்குத் தேவையான பொருட்கள் இடம் ஆகியவற்றின் அமைப்பையும் பற்றி நாம் காண்கிறேம்.

## நற்கருணைச் செபங்கள்

மாற்றங்களில் மிகச் சிறப்பானவை புதிதாய்ச் சேர்க்கப்பட்ட நற்கருணைச் செபங்கள் (Eucharistic prayers) உரோமை வழிபாட்டு முறையில் பல நன்றியுரைகளும் ஒரே ஒரு நடுப்பூசைச் செபமும் (canon) இருப்பதை நாமறிவோம். கிழக்கத்திய வழிபாட்டு முறைகளில் பல நடுப்பூசைச்செபங்கள் (canons or anaphoras) இருக்கின்றன. இப்போது ஏற்கனவே யுள்ள நற்கருணைச் செபத்தோடு மூன்று புதிய நற்கருணைச் செபங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகள் மீட்புப்பற்றிய மறைபொருளின் பல்வேறு உண்மைகளை வலியுறுத்துகின்றன; நமது நன்றியறிதலுக்கும் பலவாறு உதவிபுரிகின்றன. ஆனல் ஒழுங்கு முறையை ஏற்படுத்தும்வண்ணமும் கூட்டுப்பணியில் எளிதாக இருக்கும்படியும் நடுப்பூசையில் சொல்லப்படும் எழுந்தேற்றச் செபங்கள் (words of Consecration) மட்டும் எத்தகைய மாற்றமுமின்றி இந் நான்கு நற்கருணைச் செபங்களிலும் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

"அனைவரும் இதை
வாங்கி உண்ணுங்கள்;
ஏனெனில், இது உங்களுக்
காகக் கையளிக்கப்படும்
என் சரீரம்."

"அனைவரும் இதை
வாங்கிப் பருகுங்கள்;
ஏனெனில், இது புதிய நித்திய
உடன்படிக்கைக்கான
என் இரத்தத்தின் கிண்ணம்,
இந்த இரத்தம்
பாவ மன்னிப்புக்கென்று
உங்களுக்காகவும் பலருக்
காகவும் சிந்தப்படும்;
இதை என் நினைவாகச்
செய்யுங்கள்."

"இது விசுவாசத்தின் மறைபொருள்" என்ற சொற்றொடர் தனித்தெடுக்கப்பட்டு மக்களின் வாழ்த்தொலிக்குக் குருவானவர் கூறும் முன்னுரையாக அமைகிறது.

## சடங்கிலே மாற்றம்

திருப்பலியின் வழிபாட்டுச் சடங்குகள் சில மாற்றியமைக்கப்பட்டுள்ளன. ஆனல் அதிக சிரத்தையோடு, அவைகளின் முதல் நோக்கம் கலையாதவாறு புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. பிற்சேர்க்கையாகவந்த பல சடங்குகள் எடுபட்டுவிட்டன. குறிப்பாக அப்பாசத்தை ஒப்புக்கொடுக்கும் முறையிலும், அப்பத்தைப் பிடும்போதும் நற்கருணை அருந்தும்போதுமுள்ள சடங்குகளில் மாற்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. காலப்போக்கினுல் விடுபட்ட பல சடங்குகள் மீண்டும் கையாளப்பட்டுள்ளன, அதில் முக்கியமானவை திருவுரையும் (Homily) விசுவாசிகள் மன்றுட்டுமே.

## வேதாகமத்தைக் கேட்கும் வாய்ப்பு உயர்வு

வத்திக்கான் சங்கத்தின் தீர்மானத்திற்கிணங்க வேதாகமத்தை ஓரளவு முற்றிலும் வாசிக்கக்கூடிய வாய்ப்பு இத் திருப்பலிப் புத்தகத்தில் வகுக்கப்பட்டுள்ளது. (Lectionary) இதற்கொப்ப மூன்றுண்டுக்கு ஒருமுறை வேதாகமத்தின் சிறந்த பகுதிகளை முடிக்கக்கூடிய வகையில் ஞாயிறு வாசகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஞாயிற்றுக் கிழமைகளிலும் முக்கிய திருநாட்களிலும் நிருபத்திற்கு முன்பு பழைய ஏற்பாட்டிலிருந்து ஒரு வாசகமும், பாஸ்கா காலங்களில் அப்போஸ்தலர் திருப்பணியிலிருந்து ஒரு வாசகமும் கையாளப்படுகின்றன. இதனுல் மீட்பின் வரலாற்றை உணர்த்தும் வேதாகம வாசகங்களைக் கேட்கக்கூடிய வாய்ப்புக்கள் வளர்க்கப்படுகின்றன.

இதன் காரணமாக இறைவனின் வார்த்தையைக் கேட்கும் ஆர்வம் மக்களிடையே வளருகிறது. பரிசுத்த ஆவியின் துணையால் புதிய உடன்படிக்கையின் மக்கள் திருச்சபையின் பூரண ஒன்றிப்புக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். குருவும் மக்களும் சேர்ந்து இறைவனின் உணவில் பங்குகொள்ளத் தங்கள் இதயங்களைத் தயார் செய்வார்களாக; வேதாகம வாசகங்களின் சிந்தனையால் தூண்டப்பட்டு ஒவ்வொரு நாளும் இறைவனின் வார்த்தையில் அவர்கள் தங்களையே பக்குவப்படுத்திக் கொள்வார்களாக; ஏனெனில் வத்திக்கான் சங்கம் கூறுவதுபோல் பரிசுத்த வேதாகமமே ஆன்மீக வாழ்வின் முடிவில்லா ஊற்று. கிறிஸ்தவக் கோட்பாட்டை மற்றவருக்கு அளிக்கவல்ல உயிருள்ள கருவியும் அதுவே; எல்லா இறையியலின் மையமும் அடித்தளமும் அதுவே,

மேற்கூறிய மூன்று பெரும் மாற்றங்களோடு (நற்கருணைச் செபங்கள், வழிபாட்டுச் சடங்கு, வேதாகம வாசகங்கள்) திருப்பலிப் புத்தகத்தில் மற்றும் சில பகுதிகளும் மாற்றமடைந்திருக்கின்றன. அதாவது, குறிப்பிட்ட காலங்களுக்குரிய பகுதியிலும் புனிதருக்குரிய பகுதிகளிலும் சிறிது திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளிலெல்லாம் செபங்களின் அமைப்புக்களே மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு புதிதாக வகுக்கப்பட்ட திருப்பலிப் புத்தகத்தின் செயல்முறையானது நவம்பர் மாதம் 30ஆம் திகதி (திருவருகைக்காலம் முதல் ஞாயிறு) யிலிருந்து அமுலாக்கப்பட வேண்டுமென்று பாப்பரசர் வேண்டுகிருர். இப் புதுமுறையானது பல்வேறு வகைப்பட்ட மக்களின் ஒருமைப்பாட்டுக்குத் துணைபுரியவும், அனைவரும் பரிசுத்த ஆவியில் ஒன்றுகூடி உன்னத குருவாம் கிறிஸ்துவின்வழியாக விண்ணகத் தந்தைக்குரிய ஒரே பலியை ஒப்புக்கொடுக்கவும் முயல வேண்டும் என்று அன்புப் பாப்பரசர் தம் விருப்பத்தை வெளிப்படுத்தி, அதற்கு ஆவன செய்ய நம் ஒவ்வொருவரையும் அழைக்கிருர்.

இந் நிருபத்தை 1969ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ஆம் நாள் உரோமையில் பாப்பு சின்னப்பர் பிரகடனம் செய்தார்.

"Doctrine & Life," July 69

தமிழில்: மயான்.

நன்றி: கத்தோலிக்குசேவை

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

ஆகமனகாலத்தில் கிறிஸ்துவின் வருகைக்காகக் காத்திருக்கின்றேம். ஏற்கனவே கிறிஸ்து வந்துவிட்டார். இனி நாம் அவரின்இரண்டாம் வருகைக்காகக் காத்திருப்பதே பொருந்தும். எனவே, ஆகமன காலத்தில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை மனதில் கொண்டு கீழ்க்காணும் வசனங்களைத் தியானிப்போம்.

"மின்னல் கிழக்கில்தோன்றிமேற்குவரை தெரிவதுபோலவே மனுமகன் வருகையும் இருக்கும்" (மத். 24: 37),

"மனுமகன் தம் தந்தையின் மாட்சியில் தம் வானதூதரோடு வரப்போகிருர். அப்பொழுது ஒவ்வொருவனுக்கும் அவனவன் செயலுக்கு ஏற்பக் கைம்மாறு அளிப்பார்" (மத். 16: 27).

"அப்போது வானத்தில் மனுமகனின்அறிகுறி தோன்றும். அப்போது மண்ணுலகின் குலத்தோர் எல்லாம், மாரடித்துக் கொள்வர். மனுமகன் மிகுந்த வல்லமையோடும், மாட்சிமையோடும் வான மேகங்களின்மீது வருவதைக் காண்பார்கள்" (மத்.24:30).

"விபசாரமும், பாவமும் உள்ள இத்தலைமுறையில் என்னைப்பற்றியும், என் வார்த்தைகளைப் பற்றியும் வெட்கப்படுகிறவன் எவனே, அவனைப் பற்றி மனுமகன் தம் தந்தையின் மாட்சிமையில் புனித வானதூதரோடு வரும்போது வெட்கப்படுவார்" (மாற்கு 8 : 38).

"வானத்தின் படைகள் அசைக்கப்படும். அப்பொழுது மனுமகன் மிகுந்த வல்லமையோடும், மாட்சியோடும் மேகத்தின்மீது வருவதைக் காண்பார்கள்" (லூக்காஸ் 21 : 27).

"நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில், நீங்கள் நினையாதநேரத்தில் மனுமகன் வருவார்" (லூக்காஸ் 12: 40).

"நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பிவந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். அப்போது நான்இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்" (அரு.14: 3).

"கலிலேய மனிதரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த யேசுநாதர் எப்படி பரலோகத்துக்கு எழுந்தருளிப் போகக் கண்டீர்களோ, அப்படியே திரும்பவும் வருவார் என்றூர்கள்."

(அப். நட. 1 : 11)

"இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடி உன்னிடத்திலுள்ளதை வைத்துக்கொள்."

(அரு. காட்சி. 3 : 11)

"இதோ, திருடனைப் போல் வருகின்றேன்; தன் மானத்தை (மனிதர்) காணும்படி நிர்வாணமாய் நடவாமல் விழிப்பாயிருந்து தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்."

(அரு. காட்சி. 16 : 15)

"மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றூர்; ஆமென். ஆண்டவராகிய யேசுவே வாரும்."

(அரு. காட்சி. 22 : 20)

தொகுத்தவர்:
D. யோசப்,
வேதியர் பயிற்சிப் பள்ளி,
பூந்தமல்லி.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

தேவனின் இரக்கத்தினுலும் லூர்துமாதாவின் மன்றுட்டினுலும் பார்வை இல்லாமலிருந்த கண் பார்வை அடையப்பெற்றன. தேவதாயாருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

லூர்துதாயாரின் அடியாள்
[144 | 69]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேனா



**பிதாப்பிதா கென்னடி :**

1961-ம் ஆண்டு தைமாதம் 20-ந்திகதி மாலை அமரர் யோண் கென்னடி அமெரிக்காவின் 35-வது அதிபாக பதவியேற்றவேளை. பிரமுகர் வரிசையில் அமர்ந்திருந்த அந்தமனிதரின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. பலவருடகாலமாக தாம்கண்ட கனவு நனவாகியது குறித்து பெருமைகொண்டார் அவர். ஆயின் அந்தவருடம் முடிவடைதற்கு முன்னுல் அந்த மனிதர் இழுப்புநோயினுல் பலமாகத் தாக்குண்டார். மூளை இயங்கமறுத்துவிட்டது. அமெரிக்க பிரமுகர் வரிசையிலிருந்து மெல்ல மெல்ல அவாது நாமம் பின்னுக்கித் தள்ளப்பட்டது. அதிபர் யோண்கென்னடி கொலையுண்டபோதும் செனட்டர் ரொபேட் கென்னடி கொலையுண்டபோதும் அந்த மனிதரின் நாமம் சிறுக உலக மக்கள் மத்தியில் உலாவியது. ஆம். அந்த மனிதர் இருவாரங்கட்கு முன்னுல், எட்டுவருடங்கள் பாயும் படுக்கையுமாக கிடந்தபின்னுல் இறைவனடி சேர்ந்தார். அவர்தான் கென்னடி குடும்பத்தவரின் பிதாப்பிதா என செய்தியாளர்களால் அழைக்கப்பட்ட பற்றிக் யோசவ் கென்னடி ஆவர்.

**ஆல்போற்செழித்த விருட்சம் :**

யோசவ் கென்னடி மசூட்டஸ் மாகாணத்தில் கைனிஸ் துறையருகில் உள்ள தமது வளமிக்க மாளிகையில் அமைதியாக இறைவன் கரங்களில் தமதாவியைக் கையளித்தார். அவாது மரணப்படுக்கையண்டை செனட்டர் எட்வாட் கென்னடியுடன் (சீவந்தாயிருக்கும் ஒரேபுதல்வர்) புதல்விகள் நன்சி சிறைவர், பற்றிசியா லேபோட், ஜீன் சிமித் ஆகியோரும் விதவைகளான மருமகள்கள் ஜாக்குலைன் ஒனுசிஸ், எதெல் கென்னடி என்பவர்களும் 79வயதினரும் யோசவுடன் 55 வருடங்கள் இல்வாழ்வை அனுபவித்தவருமான திருமதி ரோஸ் கென்னடியும் 27பேரப்பிள்ளைகளும் காத்திருந்தார்கள்,

**எளிமையான பிரேத ஊர்வலம்:**

தாய்மணி ரோஸ்கென்னடி சாதாரணமான அடக்கச் சடங்குகட்குமட்டுமே உத்தாவிட்டார். திருச்சபையின் மறுமலர்ச்சி நிகழ்ச்சி கட்கிணங்க குடும்பநண்பரான கர்தினுல் ரிச்சாட் குசிங் ஆண்டகை வெள்ளை உடுமானங்களைத் தரித்து துக்கப்பலி பூசை ஒப்புக்கொடுத்தார். பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் நடைபெற்ற இறுதிச் சடங்குகளில் 70பேர்மட்டுமே காணப்பட்டனர். இவர்களில் பாதிப்பேருக்குமேல் குடும்ப அங்கத்தினராவர். இறுதியுரை நிகழ்த்திய இன்றைய கென்னடி குடும்ப முதல்வன் எட்வாட் கென்னடி தளதளக்கும் குரலில் தந்தையின் சடலத்தைப் பார்த்தவண்ணம் ......தங்களால் சாதிக்கமுடிந்தவற்றைச் சாதித்த பின்னர் சாத்தான் தன்னுல் முடிந்தவற்றை உங்களில் சாதித்தான் என உருக்கமாக கூறினுர். ஆலயச்சடங்குகளின் பின்னுல் பன்னிரு மோட்டார் வண்டிகள் பிரேதஊர்வலத்தில் கலந்துகொண்டன. 75மைல்கட்கப்பாலுள்ள கொலிவுட் மயானத்துக்கு ஊர்வலம் சென்றுதரித்தது. இம்மயானத்தில் ஒருபகுதியை தமது குடும்பத்துக்கென காலஞ்சென்ற யோசவ்கென்னடி 50வருடங்கட்கு முன்னுல் வாங்கியிருந்தார்.

**ஐரிஸ் சந்ததியார் :**

கோடீஸ்சுவரர் யோசவ்கென்னடியின் வரலாறு அமெரிக்க சரித்திரத்தில் உழைப்பால் உயர்ந்தோரின் வரிசையில் இடம்பெற்ற ஒன்று. 1840-ல் அவாது பாட்டனுர் அயர்லாந்திலிருந்து பிழைக்க வழியில்லாத காரணத்தால் அமெரிக்காவுக்கு வந்துசேர்ந்தார். அவாது புதல்வர் பற்றிக் தனது உழைப்பால் சிறியதொரு வங்கியை நிர்வகிக்குமளவுக்கு உயர்ந்துவிட்டார். இளைஞர் யோசவ் பாடசாலைப் பருவத்தில் அவ்வளவாகத் திறமை காட்டவில்லை. கார்வாட் சர்வகலாசாலையிலும் விளையாட்டிலேயே அவர்கவனம் கூடுதலாகச் சென்றது. ஆயின் தமது கவனத்தை வர்த்தகத்தில் செலுத்தினுர். அமெரிக்கா பிரமிக்கும் அளவுக்கு அவாது வர்த்தகத் திறமை அவரை கோடீஸ்சுவர அந்தஸ்துக்கு உயர்த்தியது. 25-வதுவயதில் நாற்பத்தையாயிரம் டாலர்களை கடனுகப்பெற்று தந்தை நிர்வகித்த வங்கியைத்தமக்குடமையாக்கினுர். அடுத்தவருடம் ரோஸ் பிற்ஜாரல்ட் என்ற அழகுவனிதையை விவாகம் செய்துகொண்டார்.

**உலகம்போற்றும் உன்னத குடும்பம் :**

இந்த அன்புத்தம்பதிகளின் இல்லறப்பூங்காவில் பூத்துக் குலுங்கியவை ஒன்பது மலர்கள். அவர்கள் யோசவ், யோண்(காலஞ்சென்ற அமெரிக்க ஜனுதிபதி) ரோஸ்மேரி, கத்தலின், நன்சி, பற்றிசியா, ரோபட் (காலஞ்சென்ற அமெரிக்க செனட்டர்), ஜீன், எட்வாட் என்பவர்கள். புதல்வர்களை வளர்ப்பதில் ரோஸ்மேரி கவனஞ்செலுத்த யோசவ் வர்த்தகத்தில் தன் முழுக்கவனத்தையும் செலவிட்டார். திரைப்படத்தொழிலிலும், எண்ணெய்க் கம்பெனிகளிலும் தைரியமாகத் தம் பணத்தை பெருமளவில் முதலிட்டார். பத்துவருடங்கள் மட்டுமே அவாது கவனம் முழுமூச்சாக வர்த்தகத்தில் சென்றது. பின்னர் பணத்தை முதலீடுசெய்துவிட்டு அரசியலில் இறங்கினுர் யோசவ் கென்னடி.

**உன்னத குறிக்கோள் :**

அரசியலிலோ வர்த்தகத்திலோ கென்னடி குடும்பத்தவன் இரண்டாம் தானத்தைப் பெறக்கூடாது. முதலிடத்தையே பெறுதல்வேண்டும் என்பது இந்தக் கோடீஸ்சுவரரின் தாரகமந்திரமாகும். 1934-ல் அரசாங்க ஆணைக்குழு ஒன்றின் தலைமைப்பதவியைப் பெற்றுர் யோசவ். அமெரிக்காவின் பிரசித்திபெற்ற ஜனுதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட் தேர்தலில் வெற்றிபெற அயராதுழைத்தார். 1938-ல் பிரித்தானியாவில் அமெரிக்க ஸ்தானிகராக பதவியேற்றுர். இக்காலத்தில்தான் தம்குடும்பத்தினர் அனைவருடனும் ரோமை சென்று பாப்பரசரின் பிரத்தியேக சந்திப்பையும் பெற்றுர். கென்னடி குடும்பத்தவரின் பெயர் அக்காலத்திலேயே மிகப்பிரசித்தி பெற்றிருந்தமைக்கு திருத்தந்தை பன்னிரண்டாம் பத்திநாதர் இவர்களைக்கண்டவுடன் தமதாசனத்திநின்றும் எழுந்து வரவேற்றமை ஒரு சான்றுகும்.

**புதல்வர்களின் உயர்ச்சி :**

தமது புதல்வர்கள் அமெரிக்க அரசியலில் மிகமிக உயர வேண்டுமென்பது அவர் கண்டதொரு கனவு. இக்கனவு நனவாக தம் புதல்வர்களைத் தயார்செய்யத்தொடங்கினுர். பணத்தால் அரசியல் அதிகாரத்தைப் பெறமுடியாது. ஆயின் அதிகாரத்தின் பக்கமாக செல்வதற்கு பணம் மிகமிக அவசியம் என தன்புதல்வர்கட்கு அடிக்கடி கூறுவார். உங்கள் திறமையால் முயற்சியுங்கள். தேவையான செலவுகட்கு நான் பணம் தருகிறேன் என்றுர். நிறைந்த அழகும் கம்பீர தோற்றமும் அறிவாற்றலும்கொண்ட மூத்த புதல்வன் யோசவ் யுத்தத்தின்போது விமானவிபத்தில் சிக்கிமாண்டது அவருக்குப்பெரும் அதிர்ச்சியைத்தந்தது. அமெரிக்க அதிபர் பதவிபோய்விட்டதே என அவர் கவலையுற்றுர். யோண்கென்னடி அதிபாக தெரியப்பட்ட பின்னர்தான் அவர்மனம் சாந்தியுற்றதெனலாம்.

**சமய அனுசரணை :**

யோசவ் ஒரு உத்தம கத்தோலிக்கர். மதஅனுசரணைகள் தப்பாதவர். அவாது உதவிபெற்ற கத்தோலிக்க ஸ்தாபனங்கள் அனந்தம். குருக்களும் கன்னியரும் தேவைநோக்கி அவரிடம் வந்தபோதெல்லாம் அள்ளியள்ளிக் கொடுத்தார். பொஸ்ரன் நகர கருதினுல் ரிச்சாட் குசிங் ஆண்டகை அவாது உற்றநண்பன் ஆவர். புதல்வர்கள் கொலையுண்டபோது, புதல்வியொருத்தி மனநோயால் தாக்குண்டு இன்றளவும் வருந்துகிறது; புதல்வன் ஒருவனும் விமானவிபத்தில் மாணமடைந்தபோது புதல்வன் எட்வாட் முதுகெலும்பு முறிந்து மருத்துவமனையில் கிடந்தபோது, மற்றும் பல துன்பங்கள் தம் குடும்பத்தை பலமாகத் தாக்கியபோது, எல்லாவற்றிற்கும் மேலாக எட்டுவருடங்கள் பாரிசவாதத்தால் தாமே வருந்தியபோதும் அவர் இறைவனை நொந்தவரல்ல. அனைத்தையும் பொறுமையுடனும் பணிவுடனும் ஏற்றுக்கொண்டார். புதல்வர்களை, புதல்விகளை உன்னத கத்தோலிக்க வழியில் பயிற்றுவித்தார். கர்த்தர் நிறைய எனக்குத்தந்தார். மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டேன். அவர் நிறைய என்னிடமிருந்து எடுக்கும்போதுமட்டும் குறைசொல்லலாமா என அவர் கூறியவார்த்தைகள் இன்றைய உலகில் துன்பதுரிதங்களால் வருந்துவோரெல்லாம் தம்மனக்கண்ணில் நிறுத்திச் சிந்திக்க வேண்டியதொன்று.

# வரவேற்பு!

— இ. பேர்ணுட் —

பெரியதெரு மைதானம்— மக்கட்கூட்டம் முண்டியடித்துக்கொண்டிருக்கிறது. மண் போட்டால் மண்விழாது. மைதான மத்தியில் அழகானதொரு மேடை, மேடையின் அலங்கரிப்பு வேறு. அதை வர்ணிக்கத்தான் வார்த்தைகள் இல்லை, ஒலி பெருக்கி ஓசை எழுப்பிக் கீதம் இசைக்கிறது. அது காற்றிலே கலந்து நம் காதுகளில் கலகலக்கிறது. நிமிடத்துக்கொருமுறை மக்களின் பார்வை யாரையோ எதிர்பார்ப்பது போல்தெரிகிறது. அங்கும்—இங்கும், ஆடி—ஓடி, துள்ளிக்—குதித்து விளையாடும் சிறுர்களின் காட்சி ஒருபுறம். நடைபெறவிருக்கும் விழாபற்றி கூடிக்குலவுவோர் மறுபுறம். அறிமுகமான ஒருவரை அணுகினேன். விபரம் விசாரித்தேன். வரவேற்பு விழா ஒன்று நடைபெறவிருக்கிறதாம், வெளியூரிலிருந்து பிரமுகர் ஒருவர் வருகிறுராம், அதற்குத்தான் இந்த ஏற்பாடாம். விடை கிடைத்தது

நேரில் விஷயம் அறிய கூட்டத்துடன் கலந்துகொண்டேன். எதிர்பார்த்திருந்த பிரமுகர் வரச்சிறிது தாமதமானது. காரணம் காலநிலை சீராயிராததால் விமானம் தாமதித்ததுதானும். கட்டுக்கட்டாகப் பட்டாசுகள் வெடித்தன. எட்டத்தில்—கூட்டத்தினரிடையே குதூகலம்—நாதஸ்வர ஓசை காதைத் துளைக்கிறது. மைதானத்தின் பிரதான வாயிலை எல்லோர் கண்களும் எதிர்பார்க்கின்றன. ஊர்வலம் வருகிறது. பிரமுகருடன் வேறும் பிரமுகர்கள் சிலர் மேடையேறுகின்றனர். மலர்மாலைகள் ஆளையே மூடி மறைக்கின்றன. கூட்டம் நடைபெறுகிறது.

பிரமுகரைப் பாராட்டிப் பேச்சாளர். மேடையே— இல்லை அந்த மைதானமே அதிரும்படி உரையாற்றுகின்றனர். பிரமுகர் பேசும் கட்டம் வந்தது. தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி கூறிச் சிற்றுரையாற்றினுர். கரகோஷம்வானைப்பிளந்தது. கூட்டம் முடிந்தது; மக்கள் கலைந்தனர். உலக வாழ்க்கையில் ஒரு வரவேற்புவிழாவின் வர்ணனைதான் மேலே கூறியது.

ஆனுல் மகத்துவம்வாய்ந்த மாண்புமிக்க ஒருவரின் வருகைக்கு மணிக்கணக்கில் அல்ல வருடக்கணக்கில் அதுவும் ஆயிரம் ஆயிரம் வருடக்கணக்கில் காத்திருந்தது மனுக்குலம். காத்திருந்த கடவுளின் மகன் மனுஉரு எடுத்து மரியன்னையிடம் மகனுனர், காத்திருந்த பலர் அவரைக் காணவில்லை, காத்திருந்த பலர் அவரிடம் எதை எதை எல்லாம் எதிர்பார்த்தனர். ஆனுல் அவர்கள் அடைந்தது ஏமாற்றந்தான் பெரியதொரு ஏகாதிபத்தியம்— அதிலே தனக்கொரு இடம்—உன்னத பதவி—கௌரவம். ஆனுல் இவற்றிற்கு அவர் வரவில்லை, ஏழையின் ரூபமெடுத்து ஏழ்மைக் கோலத்தில் வந்தார். ஏழைகளை வாழ்விக்க வந்தார்.

இது வருகைக்காலம். அவரின் வருகைக்கு நாம் நம்மைத் தயார் செய்யும்காலம். திருச்சபையில் இது ஆகமன காலம் அல்லது திருவருகைக்காலம் என அழைக்கப்படுகிறது. அன்று மக்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அவர் வருகைக்குக் காத்திருந்தைக் குறிக்கிறது. எமது குற்றங்களுக்கு நாம் மனம்நொந்து செபத்தாலும், தபத்தாலும், ஒறுத்தல் முயற்சிகளாலும் அவரின் வருகைக்கு ஆயத்தம் செய்வோம்

எவ்விதம் வரவேற்புவிழாவில் மக்கள் ஆவலுடன் மைதானத்தில் அந்தப் பிரமுகரைக் காத்திருந்தனர். அதேபோல் நாமும் எமது இதயமாகிய மைதானத்தில் அவரை வரவேற்கக் காத்திருக்க வேண்டும். பனிகமண்ணே நீதிமானை! கனிக மண்ணே மீட்பரவரை. எவ்விதம் அப்பிரமுகரை வரவேற்க அந்த மைதானமும் அந்த மேடையும் அலங்கரிக்கப்பட்டிருந்ததோ அவ்விதமாக நாமும் திருவருகைக் காலமாகிய இக்காலத்தில் யேசுவை எம் இதயங்களில் வரவேற்க எம் இதயத்தை அழகுற அலங்கரிக்க வேண்டும். அதிக ஆவலுடன் மக்கள் அந்தப் பிரமுகர் வந்ததும் கைகொட்டி, மாலை சூட்டி, மேடையேற்றி, பாராட்டு வழங்கி, அன்பளிப்பு அளித்து அவரைக் கௌரவித்தனரோ நாமும் அத்தகைய விதத்தில் யேசுவை வரவேற்கத் தயாராக வேண்டும். எந்தன் இதயத்தில் எழுந்துவா; எந்தன் இதயத்தை ஆளவா; வசந்த காலையில் அமுதேவா; மலர்ந்தவாழ்வை அருளவா! கலங்கரைச் சுடரே வாராய்! நலம்பெற வரமேதாராய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிந்த கிறீஸ்தவ சகோதரர்

( சென்றவாரத் தொடர்ச்சி )

கிறிஸ்தவர்களாகிய நாம் இன்று ஒற்றுமையின் பாதையில் நடந்துகொண்டிருக்கும் போது, பிரிந்த கிறிஸ்தவ சகோதரரிடம் இருந்து எவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும், நாம் எவற்றை அவர்களுக்குக் கொடுக்கலாம் என்றும் அறிந்துகொள்வது நலம். கிறிஸ்துநாதர் ஸ்தாபித்த ஒரே திருச்சபையின் ஒரே போதனையைப் பின்பற்றிவரும் நம், பரிசுத்த சகோதரரிடம் கண்டுபாவிக்கவேண்டிய சில நல்ல காரியங்களும் உள என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அவையாவன:-

1. செபிக்கும்தன்மை.
2. போதகருடன் ஒத்துழைக்கும் மனப்பான்மை.
3. தாபரிப்புப்பணம்கொடுப்பதில்காட்டும் தாராளம்.
4. சமயபாடம் கற்பித்தல்.
5. உடை நடை பழக்க வழக்கம்.

1. செபிக்கும் தன்மை:-

பிரிந்த கிறிஸ்தவ சகோதரர் எவ்வித மனப்பாடச் செபமுமின்றி, கண்களை இறுக மூடி இதய ஆழத்திலிருந்து உணர்ச்சியுடன் இறைவனுடன் ஒன்றித்துச் செபிப்பதில் நாம் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். அத்துடன் கோயிலில் தேவ ஆராதனை வேளைகளில், யாவரும் ஒருங்குசேர்ந்து செபங்களை வாசிப்பதிலும், கூட்டு ஆராதனை நடத்துவதிலும், இனிய பாடல்களைச் சபையார் முழுப் பேருமே ஒருமித்துப் பாடுவதிலும் நமக்கு முன்மாதிரியாய் இருக்கிறார்கள்.

2. போதகருடன் ஒத்துழைக்கும் மனப்பான்மை:-

இவ்விஷயத்திலும் பிரிந்த கிறிஸ்தவ சகோதரர் நமக்கு மேல்வரிச்சட்டமாய் இருக்கின்றனர். அவர்கள் சமயகுரு ஓர் குடும்பஸ்தனுயிருந்தும், அவர்களைக் கனம்பண்ணி, ஒத்துழைத்து, தோளோடு தோள் கொடுத்துநின்று உதவி செய்வர்.

3. தாபரிப்புப் பணவிஷயமான தாராளமனப்பான்மை:-

இதுவிஷயமாகவும் நாம் அவர்களிடம் கற்கவேண்டிய பெருந்தன்மையான குணங்கள் பல உண்டு. மாதம் முடிய போதகர், அவரவர் பெயருடன் என்வலப்புகள் அனுப்புவார். வீட்டுச் செலவுகளில் ஒன்ருக அத் தாபரிப்புப் பணத்தையும் அவ்வுறைகளில் இட்டு, தத்தம் நிலை பரத்துக்கேற்ப நல்மனமாய் அனுப்புவர். அத்துடன் வருடத்தில் ஒரு நாள் ஸ்தோத்திரப் பலிக்கூட்டம் ஒன்று நடத்துவர். அதற்கு ஒவ்வோர் குடும்பமும், தத்தம, விளை பொருட்களில் திறமான வற்றை, ஆபேலின் காணிக்கை போல் கனமனமாய்க் கொடுப்பர். அவற்றை செபத்துடன் ஏலத்தில் விற்று தாங்களே அவ்வற்றைப் பணம் கொடுத்து வாங்குவர். இவ்விதம் சேரும் பெருந்தொகைப்பணம், கோயில் விஷயங்களுக்கே செலவிடுவர்.

4. ஞானேபதேச வகுப்பு நடத்தல்:-

இவ்விஷயத்தில் நாம் கட்டாயமாக அவர்களைப் பின்பற்ற வேண்டியவர்களாய் இருக்கிறோம். அரசாட்சியார் பாடசாலைகளை எடுத்தபின்பாவது நாம் இவ்விஷயத்தில் பிற்போக்காய் இருத்தல் தகாது. பிரிந்த கிறிஸ்தவ சகோதரர், ஞாயிறு மாலைகளில் ஒரு மணித்தியாலம், சபையில் உள்ள கிறிஸ்தவ ஆசிரியர், அறிவுள்ள பெற்ரோர் ஒருங்கு சேர்ந்து, பிள்ளைகளை வரவழைத்து வகுப்புகளைப் பங்கிட்டு சமயபாடம் கற்பிப்பர். வருடமுடிவில், ஒழுங்காக வந்த பிள்ளைகளுக்கும், நல்ல விடையளித்த பிள்ளைகளுக்கும் பரிசில்கள் கொடுப்பர், இப் பரிசுப் பணத்தையும், பெற்ரோரே பங்கிட்டுக் கொடுப்பர்,

5. உடை நடை பழக்கவழக்கம்:-

இவர்கள் விசேஷமாக, தேவாலயங்களில் கணிசத்துக்குரிய ஒழுக்கமான உடைகளை அணிவார்கள். வீட்டிலேயும், வீண் இடாம்பீகமின்றி மிதமிஞ்சிய மதுபானமின்றி, அடக்க ஒடுக்கமாகச் சீவிப்பர்.

அடுத்தபடியாக நாம் அவர்களுக்கு எவற்றைக் கொடுக்கலாம் என்பதைப்பற்றி ஆராய்வோம்.

அவையாவன:—

1. யேசுநாதரால் ஏற்படுத்தப்பட்ட ஒரே திருச்சபையின் ஒரே போதகத்தைப் பின்பற்றல்.
2. குருவும் பலியும்.
3. தேவதிரவிய அனுமானப் பங்கீடு விசேஷமாக, பச்சாத்தாபம், நற்கருணை, குருத்துவம், நோயில் பூசுதல்.
4. (விரத்தர்) சன்னியாசர், கன்னியர் சபைகள் சேவைகள்.
5. இறைவாக்கினர் புனிதர் தோன்றல். அவர்களின் உதவி.

1. யேசுநாதரால் ஏற்படுத்தப்பட்ட ஒரே திருச்சபையின் போதகத்தைப் பின்பற்றல்:—

யேசுநாதர் பன்னிரு அப்போஸ்தலரைத் தெரிந்து பரிசுத்த இராயப்பரைத் தலைவராக்கி, "இராயப்பா! நீ கல்லாய் இருக்கிறாய் இந்தக் கல்லின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். நரகத்தின் வாசல் அதனை மேற்கொள்ள மாட்டாது. மோட்சத்தின் திறவுகோல்களை உனக்குத்தருவேன். என் ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் மேய்ப்பாயாக" என்றார். இந்த ஆழமான ஸ்திரமான வாக்கியங்களை ஆணையாகக்கொண்டு, இரண்டாயிரம் ஆண்டுகளாக தூய ஆவியானவரின் துணையுடன் அன்றும் இன்றும் ஒரே விசுவாச சத்தியங்களைக் கடைப்பிடித்து, நடந்துவருகிறது. ரோம் நகரில் பரிசுத்த பாப்பரசர் எவ்வித பலியை, ஆராதனையை, செப ஒழுங்கைக் கடைப்பிடிக்கிறாரோ, அதையே உலகம் முழுவதிலும் உள்ள கத்தோலிக்க திருச்சபை ஒழுகிவருகிறது. ஒரு கத். கிறிஸ்தவன் எங்கு சென்றாலும், ஒவ்வொரு கத். கோயிலிலும், தட்டுத்தடையின்றி, பலியில் ஆராதனையில் பங்குபற்றமுடியும். நம் பிரிந்துபோன சகோதரர் ஆலயங்களில் ஒரு சபையைச் சேர்ந்தோர் மறுசபையில் இவ்விதம் பங்குபற்றமுடியாது இடர்ப்படுவதை நாம் அறிவோம். ஏனெனில், செபம் வேறு ஆராதனை வேறு, ஒழுங்குகள் வெவ்வேறு, எனவே நாம் இதுவிஷயத்தில் பெருமைப்பட வேண்டியவர்களாயும், இறைவனுக்கு நன்றி கூற வேண்டியவர்களாயும் இருக்கிறோம்.

2. குருவும் பலியும்:—

யேசுநாதர் என்ன நோக்குடன் வந்து கல்வாரிப் பலியை ஒப்புக்கொடுத்து மக்களை இரட்சித்தாரோ, அதே நோக்குடன் அதைத் தொடர்ந்து,

[மறுபக்கம் பார்க்க]

## 4-ம், 6-ம், 7-ம் வகுப்புகளின்
## ஞானேபதேசப் பரீட்சை — 1969.
# பரிசுபெற்ற பரீட்சார்த்திகள்

| | சுட்டிலக்கம் | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| | | **4-ம் வகுப்பு** | |
| [1 | 356 | பி. டொன் ஜோட்ஸ் | ரோ. க. பாடசாலை, பள்ளிமுனை. |
| [2] | 354 | ஞ. செபஸ்ரியான் | ,, ,, |
| [3 | 1300 | அ. பேரி பிளண்டீனு | புனித தோமாஸ் ரோ. க. பெ. பாட. மாதகல். |
| [4] | 1678 | க. பேபி | ரோ. க. பாடசாலை, அல்வாய் வடக்கு. |
| [5] | 2168 | சி. ஜே. ராஜமோகன் | புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் |
| [6] | 2220 | ஆன்சலோ பிரான்சிஸ் | ,, ,, ,, |
| [7] | 2399 | எல். குயின் மேரி | திரு. கன். ஆங்கில பாடசாலை, யாழ்ப்பாணம். |
| [8] | 2429 | சத்தியபவா இம்மானுவேல் | ,, ,, ,, |
| [9] | 2466 | சார்மின் அல்பிரட் | ,, ,, ,, |
| [10] | 2470 | மௌறின் சவிரிமுத்து | ,, ,, ,, |
| [11] | 2528 | சி. கோமஸ் | அரசினர் பாடசாலை, புதுக்கமம். |
| | | **6-ம் வகுப்பு** | |
| [1] | 2697 | ஆ. மேரி பேணடேற் | நல்லாயன் பெண்பாடசாலை, மன்னார். |
| [2] | 2680 | பா. மேரி லோறன்சியா | ,, ,, ,, |
| [3] | 2956 | யோ. ஆரோக்கியம் குரூஸ் | ரோ. க. மகாவித்தியாலயம், வங்காலை. |
| [4] | 3499 | பா. வோல்ரர் ஜீவநாயகம் | ரோ. க. பாடசாலை, கலட்டி, பருத்தித்துறை. |
| [5] | 3834 | ஈ. சி. கிளன்னி | புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம். |
| [6] | 3873 | எஸ். ஏ. அமலநாதன் | ,, ,, ,, ,, |
| [7] | 3999 | சகாயபாமா இம்மானுவேல் | திருக். கன்னி. ஆங்கில பாட., யாழ்ப்பாணம். |
| | | **7-ம் வகுப்பு** | |
| [1] | 4315 | லூ. மரிதர்மதாஸ் | ரோ. க. பாடசாலை, விடத்தல்தீவு. |
| [2] | 5083 | ஈ. ஜே. செபஸ்ரியன் தாஸ் | புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம். |
| [3] | 5179 | சு. யசிந்தா | புனித ஜோண்பொஸ்கோ, றக்கா வீதி, யாழ். |
| [4] | 4895 | கி. துரைநாயகம் | ரோ. க பாடசாலை, அச்சுவேலி வடக்கு. |
| [5] | 4956 | எம் மேரி கிறில்டா | திருக்குடும்பக் கன்னியர்மடம், இளவாலை. |

பரீட்சையைச் சித்திகரமாக நடத்துவதற்குப் பல்வழிகளிலும் உதவிபுரிந்த எல்லோர்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

G. T. பாலசுந்தரம், O.M.I.
சமயபாட மேற்பார்வையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. C. E. (Ordinary Level)

# கிறீஸ்தவம்

க. பொ. த. பத்திரப் பரீட்சைக்குரியது (மார்கழி 1969)

— சிஸ். அன்ரனி யோசவ் —

## பொது விஞக்கள்

14. ஐசுவரியவானையும் ஏழை லாசாரையும் பற்றிய உவமையைக் கூறி (16/14—31) விளக்குக?

| | |
|---|---|
| 1. ஐசுவரியவான். | 1. யூததேசம். |
| 2. நாளாந்தம் சம்பிரமமாய் விருந்தாடல். | 2. இவர்கள் பெற்ற ஞானச் சலுகைகள். |
| 3. புண்கள் நிறைந்த பிச்சைக்கார லாசார். | 3. ஞானவியாதிகள் நிறைந்த பிறசாதியினர். |
| 4. லாசார் ஆபிரகாமின் மடியில். | 4. கிறீஸ்துவின் திருச்சபைக்குள் புறசாதியினர் அனுமதிக்கப்படல். |
| 5. நரகத்தில் தள்ளப்பட்ட ஐசுவரியவான். | 5. இறைவனல் கைவிடப்பட்ட யூதரின்நிலை. |

15. மலைப்பிரசங்கத்தின் விமரிசனம்.

1. பாக்கியங்கள் :
   தரித்திரர், பசித்தோர், அழுகிறவர், உபத்திரப்படுபவர் (6/20—23 ).
2. கேடுகள் :
   ஐசுவரியவான், திருப்தியடைவோர், சிரிக்கிறவர், சனங்களின் புகழ் தேடுபவர் (6|24—26).
3. பிறர் அன்பு:
   "உங்கள் சத்துராதிகளை நேசியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்கள்மேல் அபாண்டம் சொல்லுகிறவர்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்" (/27—28.).
4. கிறீஸ்தவ பொறுமையின் சட்டம் :
   "உன்னை ஒரு கன்னத்தில் அடிக்கிறவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு" (6/29).
5. தானதருமம் :
   "உன்னைக் கேட்கிற எவனுக்கும் கொடு" (6/30).
6. மற்றவர்களை அன்புடன் தீர்மானித்தல் :
   (1) குருடனுக்கு குருடன் வழிகாட்டினல் இருவரும் குழியில் அல்லவோ விழுவார்கள்" (6|39).
   (2) சகோதரன் கண்ணில் இருக்கும் உத்திரம் :
   "கள்ள ஞானியே! முந்த முந்த உன் கண்ணிலிருக்கும் உத்திரத்தைத் தள்ளிவிடு (6|41—42).
7. தங்கள் கிரிகைகளைக் கொண்டு மக்கள் அறியப்படுகிறார்கள்.
   "நல்ல மனிதன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகின்றான். கெட்டவனே கெட்டவைகளைக் காட்டுகிறான்" (6/45).
8. இரட்சணியம் அடைவதற்கு இறைவனின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும்.
   புத்திசாலியான கட்டிடக்காரன்; மடைத்தன முள்ள கட்டிடக்காரன் (6/43—49).

# பிரிந்த கிறீஸ்தவ சகோதரர்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தம்மைத் தியாகம்செய்து விரதத்துவத்லைதக் கடைப்பிடித்து, கிறிஸ்து தொடங்கிவிட்ட ஆன்ம ஈடேற்றப் பணியைத் தொடர்ந்து நடத்தி பீடப்பலியை ஒப்புக்கொடுத்து பலிப்பொருளையும் தாமும் உட்கொண்டு விசுவாசிகளுக்கும் பகிர்ந்தளிக்கின்றனர். பிரிந்த கிறிஸ்தவ சகோதரர் போல் மாதத்தில் ஒரு ஞாயிறு மாத்திரமல்ல, அன்றேல் ஞாயிறு வாரங்களில் மாத்திரமல்ல, நாள்தோறும், கிறிஸ்து தொடக்கிவிட்ட மீட்புப் பலியை, பீடப்பலி மூலம் நிறைவேற்றிவருகின்றனர். இதைப் பற்றியே மலக்கியாஸ் என்னும் தீர்க்கதரிசி "எழுவான் தொடக்கம் படுவான் ஈறுக இறைவனுக்குப் பலி ஒப்புக்கொடுக்கப்படும் என்று வசனித்தார். அத்துடன் குருமார் விரத்தாரயிருப்பதினுலல்லவா தேவநற்கருணையைப் பீடங்களில் வைத்துக் காப்பாற்றி, நோயாளிகளுக்கும், மரணத்தருவாயில் இருப்போருக்கும் விரும்பிய வேளைகளில் எல்லாம் பகிர்ந்தளிக்கின்றனர். இதுபற்றியே பரி. பவுல் அப்போஸ்தலர், 1ஆம் கொரி. 7ஆம் அதிகாரத்தில் விவாகம் செய்யாமல் இருப்பவனே தேவ ஊழியத்தைச் சிறந்த முறையில் செய்வான் என்றும், விவாகம் செய்தவன் மனைவியை எவ்வாறு திருப்திப்படுத்தலாம் என்று சிந்திப்பதினுல், கர்த்தருக்குரியவைகளை முழுமனமாய்ச் சிந்தியாது விடுகிறுன் என்றும், விவாகம்செய்யாதவனே, கர்த்தரை மாத்திரமே சிந்தித்து, அவரைமாத்திரமே திருப்திப்படுத்துகிறுன் என்றும், விளக்கமாகக் கூறுகிருர். விவாகம் செய்யாத புனித அருளப்பர், புனிதசின்னப்பர் முதலியோர் வானமண்டலம் மட்டாய் உயர்த்தப்பட்டு மனிதர் விளங்காத விண்ணரசின் பரம இரகசியங்களை மனிதருக்கு அறியவைத்தனர். இவ்வித விரத்தரின் பரம ஒன்றிப்பை வேதாகமமே நமக்கு எடுத்துக்காட்டிச் சாட்சிபகருகிறது.

3. தேவதிரவிய அனுமானப் பங்கீடு:—

இத்தேவ அருளிக்கங்கள் மூலமே நாம் இறைவனின் ஐசுவரியங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்கிறோம். இவற்றைத் திறப்பட சிறந்தமுறையில் பெற திருச்சபைத் தலைவர்கள் நமக்குவேண்டிய உதவி செய்கின்றனர். ஒருவன் எவ்வளவு திறம்பட தன்னைத் தயாரித்து இவற்றைப் பெறுகிறுனே, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக அவன் பெறுவதற்குத் தூய ஆவியானவர் உதவி செய்கிருர். ஞானஸ்நானம் பெற்ற குழந்தை பாவபுண்ணியம் விளங்கும் வயது வந்ததும், பாவசங்கீர்த்தனம் பண்ணித் தேவநற்கருணை பெறத் தயாரிக்கப்படுகிறுன். கிறிஸ்துவைப்பெற்ற ஆன்மா, தூய ஆவியானவரையும் சம்பூரணமாக உறுதிப்பூசுதல் வழியாகப் பெறுகிறுன். இந்த விதமாக இறைவனுடன் ஒன்றுபட்டு இவ்வுலக வாழ்வின் அந்தஸ்தைத் தெரியும் போதும், அவன் நாளாந்தம் பெற்றுவந்த நற்கருணையை விசேஷவிதமாகப்பெற்று, தம் புதுவாழ்வின் கொடைகளையும் பூரணப்படுத்துகிறுன். இவ்விதமாக, இறைவனுடன் ஒன்றித்த வாழ்வு நடத்துகிறவனுக்கு வியாதியாய்ப் படுக்கும்போதும், விசேஷமாய் மரணப் படுக்கையிலும் அவன் தனது கடைசிநேரத்திலும் இறைவனுடன் ஒன்றித்து, விண்ணரசுக்குப் பாத்திரனுகும்படி நோயில்பூசுதல் என்னும் தேவ கொடையைப் பெறுகிறுன். இதைப்பற்றிப் பரி. யாகப்பர் தமது நிருபத்தில் எழுதும்போது, "உங்களில் ஒருவன் வியாதியாய் இருந்தால் அவன் சபையின் குருக்களை வரவழைப்பானுக. அவர்கள் சருவேசுரனுடைய நாமத்தால் தைலத்தால் அவனுக்குப் பூசி செபிப்பார்கள். அப்போது விசுவாசமுள்ள செபம் அவன் வியாதியைக் குணமாக்கும். அவன் பாவத்தோடிருந்தால் அவன் பாவங்களும் மன்னிக்கப்படும்" என்ருர். எவ்வளவு ஆறுதலளிக்கும் நன்மை இது? பிரிந்த கிறிஸ்தவ சபைகளில் எச்சபையுமே இவ்வித கிரிகைகளைப் புரிவதில்லை. நமது தியாகிகளான குருமார் இது விஷயத்தில் ஆன்ம ஈடேற்றப் பணியில் காட்டும் அக்கறையை, எப்படி விபரிப்பது? எவ்வித தொற்று வியாதியாய் இருப்பினும் ஏமம் சாமம் ஆக இருப்பினும், யுத்த களரியாய் இருப்பினும் தட்டுத் தடையின்றி உடன் சென்று நன்மை வழங்கி, சமாதான நித்திரைகொள்ள உதவிசெய்கின்றனர். இவ்வித கைங்கரியம்புரியும் குருமாரை வான மட்டாய் உயர்த்தாது இருக்க முடியுமா?

4. (விரத்தர்) சன்னியாசர் கன்னியர் சபைகள் சேவைகள்:—

பத்துக்கற்பனையல்ல திருச்சபைக் கற்பனையல்ல. "என்னைப் பின்செல்லுங்கள்" என்ற இனிய யேசுவின் அமிர்த வாக்கைப் பின்பற்றி, தம்மைத் தியாகம்செய்து, விரத்தத்துவ ஆடை அணிந்து, கிறிஸ்துவுக்குச் சேவைசெய்வதையே தம் இலக்காகக்கொண்டு திருச்சபையின் வெளிச்சங்களாக இலங்கும் இவர்களின் சபைகள் எத்தனை. சேவைகள் எவ்வளவு. இன்று உலகின் சீர் திருத்தத்திற்கோ, முன்னேற்றத்திற்கோ, விசேஷமாக ஆன்ம ஈடேற்றத்திறகோ உறுதுணையாய் நின்று உலகை மாற்றி நன்நிலைக்குக் கொண்டு வந்தது கத்தோலிக்க கிறிஸ்தவ சன்னியாசர், கன்னியர் என்ருல் பொய்யாகமாட்டாது. ஏழைகளின் மத்தியில், நோயாளர் அருகில், அறிவினர் சமூகத்தில், தந்தையாய், தாயாய், குருவாய் ஆன்ம வயித்தியராய் சமாதான நித்திரை வருவிப்போராய் இருந்து சேவை செய்யும் இவர்களைப்பற்றி நாம் பெருமைப்படவேண்டியவர்களாய் இருக்கிறோம். இன்று நம் திருச்சபையின் இறைவாக்கினர், புனிதர்கள் இவர்கள் மத்தியிலிருந்தே உருவாகினர் என்ருல் விரத்தத்துவத்தின், சன்னியாசத்தின் மகிமையைப்பற்றிப் பேசவும் வேண்டுமா?

5. இறைவாக்கினர் புனிதர் திருச்சபையில் தோன்றல்:—

திருச்சபையின் புனிதமான ஆட்சி காலத்துக்குக் காலம் இறைவாக்கினரை புனிதரைத் தோற்றுவிக்கிறது. இது தூய ஆவியானவரின் செயலால் நடைபெறுகிறது. இவ்வித புனிதர் இறைவாக்கினரே, திருச்சபையை பிழையான வழியில் செல்லவிடாது திருச்சபையின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றனர்.

### வேதாகமமும் பிரிந்த கிறிஸ்தவ சகோதரரும்

இறைவனுக்கு அடங்கிய வேதாகமத்தை நம் பிரிந்த கிறிஸ்துவ சகோதரர் வாசிக்கின்றனர்? பூசிக்கின்றனர் மெய். ஆயின் பரிதாபம் ஆளுக்கொரு விளக்கம், சபைக்கொரு வியக்கியானம் கொடுத்து இடர்ப்படுகின்றனர். பரி. அருளப்பர் எழுதிய சுவிசேஷம் 6ஆம் அதிகாரத்தை உதாரணமாக எடுக்கலாம். ஜீவ அப்பமாகிய தேவநற்கருணையைப் பற்றி சபைக்கொரு விளக்கம் கொடுக்கின்றனர். வேதாகமத்தில் இறைவனைத் தேடுகின்றனர். ஆயின் இறைவனின் ஞான அதிகாரத்தைக் கைவிடுகின்றனர். அதனுலேயே அவர்கள் பலதிறப்பட்டு கிறிஸ்து இல்லாத திரு இரவுணவை ஞாபகமாக உட்கொள்கின்றனர்.

இன்று நம் கத்தோலிக்க திருச்சபையின் பரிசுத்த தனத்தை கீழ்வரும் அம்சங்கள் இரண்டும் துலாம்பரமாய்க் காட்டுகின்றன.

1. குடும்பவிஷயமாக, புத்திரசந்தான விஷயத்தில் மனக்கட்டுப்பாடு ஒன்றுதவிர, வேறு எவ்வித செயற்கைத் தடைகளையும் திருச்சபை ஏற்றுக்கொள்ளவில்லை.

2. நம் மீட்பர் கிறிஸ்து தொடக்கிவிட்ட மீட்புப் பணியை நிறைவேற்றும் ஆயர், குருமார் அனைவரும் விரத்தராக இருக்கவேண்டும் என்பது.

இவ்விரு விசேஷ அம்சங்களையும் நம் பரிசுத்ததந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசர் அண்மையில் முறைப்படி பிரகடனப்படுத்தினுர்.

பெற்ருேரின் பரிசுத்தமான குடும்ப வாழ்க்கையே விரத்தர், சன்னியாசர், கன்னியரைப் பிறப்பிக்கின்றது மாத்திரமல்ல, உலகைத் திருத்தியமைக்கக்கூடிய உத்தம புத்திரரை உலகில் தோன்றச்செய்கிறது.

—நாதன்

### நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின் இரக்கத்தாலும், பற்பல புகழ் நாமதேயம் கொண்ட தேவதாயின் அனுக்கிரகத்தினுலும், புனித சூசையப்பரின் வேண்டுதலாலும், புனிதர்களாகிய அந்தோனியார் திரேசம்மாள், அன்னம்மாள், மிக்கேல் சம்மனசானவர், காவல் சம்மனசானவர் இவர்களின் மன்ருட்டாலும் நான் கேட்டுக்கொண்டபடி சுகப்பிரசவம் நடந்தேறியதுடன் என்னையும் குழந்தையையும் வருத்த துன்பங்களிலிருந்தும் காப்பாற்றியுள்ளார்கள். இவர்களின் நாமம் புகழப்படுவதாக. பிரசுரிக்கத் தாமதித்தமைக்கு மன்னிப்புக் கேட்[illegible]

## சந்தாதாரருக்கு ஒரு வேண்டுகோள்

காவலன் சந்தாதாரருக்கு 1969ஆம் ஆண்டு முடிகிறவரையிலே அவரவர் நிலுவைப் பணத்தைப் பற்றிய அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்தும் சிலர் அதைப்பற்றி இன்னமுமே கவனியாமல் இருந்து வருகின்றனர். இவர்கள் தங்கள் நிலுவைப் பணத்தைத் தாமதமில்லாது அனுப்பிவைக்கும்படி இறுதி வேண்டுகோளாகக் கேட்டுக் கொள்ளுகின்ருேம்: 1970ஆம் ஆண்டுச் சந்தாப்பணத்தையும் அடுத்த 31-1-70-க்குமுன் அனுப்பிவைக்குமாறு எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகின்ருேம்; பணம் அனுப்பும்போது தங்கள்சந்தா இலக்கத்தையும் குறித்து அனுப்பவும்.

நிர்வாக ஆசிரியர்.

### அகில உலக நிதிஒன்று அவசியம் வேண்டும்

"உலகத்தில் தாண்டவமாடும் வறுமையின் பிடியிலிருந்து பெரும்பாலான மக்களை ஓரளவு விடுவிக்க சகல தேசங்களும் ஒன்றித்து ஒரு பொது நிதி ஒன்றை உண்டாக்கி, உலகில் வறியவர்கள் எங்கெங்கு வாடுகிருர்களோ அங்கங்கு உதவி செய்ய வழிவகைகள் கண்டுபிடிப்பது அவசியம்" என சென்ற வாரம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் கிளையாகிய உணவு விவசாய நிறுவனத்தினருக்கு விடுத்த வேண்டுகோளில் எடுத்துக் காட்டியிருக்கின்ருர். இது விஷயமாக பரிசுத்த தந்தை சில வருடங்களுக்கு முன் உலக தேசங்கள் யாவும் தத்தம் வருவாயில் ஒரு சதவீதம் உலக வறுமையை அகற்ற ஒதுக்கி வைக்கவேண்டுமென்று கேட்டிருந்தார். அவரது வேண்டுகோளுக்கு இணங்கி இங்கிலாந்து உட்பட பல தேசங்கள் தத்தம் நாடுகளிலும் பிறநாடுகளிலும் வறுமையை அகற்றக்கூடிய உதவி செய்து வருகின்றன. ஆனல் சர்வதேச ரீதியில், தன்தன் தேசமென பாகுபாடு செய்யாது வறுமை எங்கு காணப் படுகிறதோ அங்கே அதை அகற்ற ஒரு உலக நிதி வேண்டுமென்பதே பரிசுத்த தந்தையின் இன்றைய வேண்டுகோள்.

### நேர்மையும் கட்டுப்பாடும் நாட்டுக்கு அத்தியாவசியம்

சென்றவாரம் கொழும்பு கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ஸ் கல்லூரியின் பரிசளிப்புவிழாவில் அக்கல்லூரி அதிபர் சங்கைக்குரிய பிறதர் விக்டர் அவர்கள் சமர்ப்பித்த கல்லூரி அறிக்கையில் எமது நாட்டுக்கு இன்று அத்தியாவசியமாய் இருக்கும் நேர்மை, கட்டுப்பாடான ஒழுக்கம் ஆகிய இரு துறைகளிலும் அக்கல்லூரி மக்களுக்கு அளிக்கப்படும் விசேஷ பயிற்சியைப் பற்றிக் குறிப்பிட்டார். கல்லூரியில் மாணவர் கற்றுக் கொள்ளவேண்டிய பல ஆற்றல்கள் உண்டு. அவைகளுள் இன்று எமது நாட்டில் நேர்மையும் கட்டுப்பாடான ஒழுக்கமும் குன்றிவருகின்றதனுல் இத்துறைகளில் விசேஷ பயிற்சி அளிக்க வேண்டியது கல்லூரிகளின் கடமையாகின்றது என்ருர் அதிபர். முன்னுல் அதிபர் சங்கைக்குரிய பிறதர் ஆலபன் விழாவில் தலைமை வகித்தார்.

## அறிவித்தல்

**சம் பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்**

**புதிய மாணவரைச் சேர்த்தல் — 1970**

1-ம், 3-ம், 4-ம், 6-ம், 9-ம், 10-ம், 11-ம் வகுப்புகளில் மாத்திரம் சிலவெற்றிடங்கள் உண்டு. மற்ற எந்தவகுப்பிலாவது இடங்கள் இல்லை. விண்ணப்ப பத்திரங்கள் ஏற்கப்படும் கடைசிநாள் 1969 ஆம் வருட மார்கழிமீ 10-ந்வ. விண்ணப்பம்செய்யும் பத்திரங்கள் கல்லூரிக் காரியாலயத்தில் பள்ளிக்கூட நாட்களில் காலை 9-15 இல் இருந்து 10-15 மட்டும் நேரேவந்து கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும்.

கல்லூரி அதிபர்.

## திரு வருகைக்கால கூட்டுப் பிரார்த்தனை

(தமிழிலும் ஆங்கிலத்திலும்)

எதிர்வரும் மார்கழி 6-ந்தேதி சனிக்கிழமை மாலை 5-30-க்கு பரி. பேதுரு மெதடிஸ்த **ஆலயத்தில்** (யாழ்ப்பாணம் நீதிமன்றங்களுக்கு அருகாமையில்) நடைபெறும்.

பின்வரும் சபைகள் பங்கு பெறும்:

ரோமன் கத்தோலிக்க திருச்சபை, இலங்கைத் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, தென்னிந்திய திருச்சபை, இரட்சணிய சேனை,

யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

## மாசின்றி........

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்பின் அணிகலனுய்க் காருண்ணியத்தின் களஞ்சியமாய் விளங்கும் தூயவளே! இனியவளே! கருணை நிறை நல்மனதுடன் எம் குறைகள் யாவும் பரிதிமுன் பனிபோல கடுகிஒடவும், எப்போதும் நல்லருள்பெற்று நல்லவர்களாய், குமாரனுக்கு உகந்தவர்களாய்ப் பார்மீதில் வாழவும் யேசுபாலனிடம் வேண்டிடுவாய். நாங்கள் பாவிகளானலும் உமது வேண்டுதலால் பாவமாசுநீங்கி பக்திச்சீவியம் சீவித்து நல்மரணம் அடைந்து மோட்ச பரமானந்தத்தைச் சுகிக்க அருகதையுள்ளவர்களாவோம் என்பது மறக்கமுடியாத உண்மை.

பரலோகபூலோகராக்கினியே, உமக்கு என்றும் எப்போதும் சுபமங்களம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திினசரி பூசை வழிகாட்டி

**மார்கழி — 1969**

| | | | |
|---|---|---|---|
| 7 | ஞாயிறு | வருகைக்கால 2-ம் ஞாயிறு | [ஊ] |
| 8 | திங்கள் | தேவதாயின் மாசில்லாத உற்பவம் | [வெ] |
| 9 | செவ்வாய் | ஞாயிறு பூசை | [ஊ] |
| 10 | புதன் | ஞாயிறு பூசை | [ஊ] |
| 11 | வியாழன் | புனித தமாசுஸ் | [வெ] |
| 12 | வெள்ளி | ஞாயிறு பூசை | [ஊ] |
| 13 | சனி | மாதாவின் நாள் (புனித லூசியம்மாள்) | [வெ] |

சத்தியவேத பாதுகாவலன்

# அமல உற்பவம்

1858-ம் ஆண்டு மசபியேல் குகையினருகில் விறகு பொறுக்கச் சென்ற சிறுமி பெர்ணதேத் ஓர் அதிசய மான காட்சியைக் கண்டாள். சொல்லில் அடங்கா அதிருபவதியான ஓர் இளம் பெண் அக்குகையிற் றேன்றி அச்சிறுமியுடன் பேசினுள். "அம்மையே! நீர் யார்?" என அச்சிறுமி வினவியதற்குக் கிடைத்த விடை: "அமலோற்பவம் நாமே!" என்பது தான். அன்று அச்சிறுமிக்கு இவ்வார்த்தைகள் விளங்க வில்லை. ஆனுல் உலகுக்கு விளங்கின. அதாவது அன்று பாப்பரசர் பிரகடனப் படுத்திய மரியாயின் மாசில்லாத உற்பவம் என்னும் வேத சத்தியத்தை உறுதிப்படுத்துவதே போன்று தேவமாதா லூர்துபதி யில் காட்சியளிக்கையில் இவ்வாறு கூறினுர்.

ஆனுல் மரியாயின் மாசில்லாத உற்பவம் வெளிப் படுத்தப்பட்டது அது முதல் தடவை அல்ல. அதற்கு இருபத்து நான்கு ஆண்டுகளின் முன் கத்தறீன் லாபோர் என்னும் கன்னியாஸ்திரிக்குக் காட்சி கொடுத்து அற்புத வரவணிக்கத்தைச் செய்யுமாறு ஏவிய போது மரியாயைச் சுற்றி "மாசில்லாமல் உற்பவித்த மரியாயே, உமது உதவியைத் தேடும் அடியோருக்காக மன்ருடியருளும்" என்னும் வார்த்தைகள் தோன்றக் கண்டாள். புதுமை வரவணிக்கத்தில் இவை இடம் பெறுகின்றன.

இவ்விரண்டும் இவை போன்ற இன்னேரன்ன உதாரணங்களும் மரியாயின் மாசற்ற உற்பவத்தைப் பறைசாற்றுகின்றன. தமது மாதாவாக விளங்கப் போகும் இக்கன்னியை இறைவன் உலகம் உண்டான காலந்தொட்டே மனதிற் கொண்டிருந்தார் என்பதை வேதாகமம் அறிவிக்கிறது. இறைவனின் சிருஷ்டிகள் யாவற்றுள்ளும் பூரணத்துவம் உடைய சிருஷ்டியாய் மாசற்ற சிருஷ்டியாய் அவள் விளங்குகிருள். சகல மனிதரும் இறைவனின் சாயலாகப் படைக்கப் பட்ட வர்தாம். ஆனுல் மரியாயே அவரது பூரண பிரதிபிம்ப மாவாள். மரியாய் உலகில் வாழும்போது எவ் வித தோற்றமுடையவளாய் இருந்தாள் என நாம் அறி யோம். ஆனுல் விண்ணகத்திலிருந்துவந்து காட்சி கொடுத்தபோதெல்லாம் அவளது தரிசனம் பெற்றவர் கள் அவள் பேரழகை வியந்து வர்ணித்துள்ள னர். அப்பேரழகின் இரகசியம் என்ன? அதை அவ ளது ஆன்ம இலாவணியத்தின் பிரதிபலிப்பு எனலாம் இறைவனது திருக்கோயிலாக விளங்குவதற் கென்றே படைக்கப்பட்ட அவளது ஆன்மாவும் உடலும் என் றுமே பசாசின் ஆட்சிக்குள் இருந்ததில்லை.

மரியாயின் மாசில்லாத உற்பவம் இரண்டு காரியங் களை எமக்கு நினைவூட்டுகிறது. முதலாவது தேவதா யின் தூய்மையும் வல்லபமும் ஆகும். பிறப்பிலும் வாழ் விலும் இணையற்ற தூய்மையுடன் விளங்கிய மரியாய் இன்று பரலோக பூலோக அரசியாக இறைவனுக்கு அடுத்தபடியான வல்லபமுடையவளாய் வீற்றிருக்கின் ருள். அடியோரின் மன்ருட்டை ஏற்று அருள்புரியச் சக்தியுடையவளாயிருக்கிருள். ஆகவே மரியாயிடம் வேண்டிக் கொள்வது மிகப் பொருத்தமானதும் கடவு ளின் சித்தத்துக்கு உகந்ததுமாகும்.

இரண்டாவதாக, மரியாய் தேவசுதனின் தாயாக விளங்கப்போகிருள் என்ற காரணத்தினுல், அவள் தேவனின் திருக்கோயிலாக விளங்கப்போகிருள் என்ப தால், அவள் மாசற்ற தூய்மையுடன் விளங்கவேண் டும் என இறைவன் விரும்பினுர். ஞானஸ்நானத் தின் வழியாகவும் தேவநற்கருணை வழியாகவும் நாமும் தேவனின் ஆலயமாக விளங்க வேண்டியவர்களே. ஆகவே எம்மிடம் எத்தகைய தூய்மையை இறைவன் விரும்புகிருர் என்பது தெளிவாகின்றது அத்தகைய தூய்மையை அடையும் வரத்தை எமக்கு அருளுமாறு அமலோற்பவ மரியிடம் வேண்டுவோமாக.

# மாசின்றி சென்மித்த தேவ அன்னையின் மகிமையே மகிமை!

— எ. கிறிஸ்பீன் விக்டர் பர்ருந்து

ஏதேன் சிங்கார வனத்தில் அன்பின் இறைவன் அளித்த அமுதவாக்கைமீறி விலக்கப் பட்ட கனியைஉண்டு தீராத ஆக்கினைகளுக்கு உடந்தை யான எமது ஆதிபிதா மாதா வின் சந்ததியைப் பாவத்தில் இருந்தும், நித்தியநரக வேத னையிலிருந்தும் மீட்பதற்கு ஏக திரித்துவத்தின் இரண் டாம் பேரான எமது அன் பின் அரசர் யேசுக்கிறீஸ்து வை உலகுக்களித்த உத்தம உயர்குல நிர்மல நித்திய கன் னித்தாயைப் பாவாலும், மனப்பூவாலும் போற்றுவது நமது ஒப்பற்ற கடமை.

பூவிற்குள் தாமரைபோல பூமியில் பிறந்த பிறக்கப்போ கிற சகல மாதவருள் ஒப்பற்ற உயர்ந்த அருள்நிறைந்த கன் னித்தாயை ஆதியிலே இறை வன் தெரிந்துகொண்டார் என வேதாகமங்கள் கூறு கின்றன. அன்று பிள்ளை இல் லாமல் மனம் தத்தளித்த ஆனுள், யுவக்கீன் என்பவர்க ளுக்குக் கடவுள் கொடுத்த சிறந்த விலைமதிக்க முடியாத பொக்கிஷம்தான் இந்தக் கன் னித்தாய். பாட்டிலும், ஏட் டிலும் அடங்கா அழகுசௌந் தரியத்துடன் காட்சியளித்த இக்குழந்தையின் பிறப்பால் வானமும் பூமியும் சொல் லொண்ணு ஆனந்தக்களிப்புக் கொண்டன. அற்பமேனும் மாசுமறுவின்றி மேதினியில் உதித்த சிறந்த மணிவிளக் குப் பூவுலகில்வாழும் சீவானு கோடி மக்களின் ஒளிவிளக் காகப் பிரகாசிக்க இறைவன் திருவுளம் கொண்டதினுல் தான்அக்குழந்தை தேவனின் தாயாக வந்ததுமல்லாமல், அந்தப் பெரிய வெள்ளிக்கிழ மை கபாலமலை மேட்டில் வே தனைகளின் மத்தியில் முழு மனுக்குலத்தினுடையவும் அன்னையாக மாறிவரவும் நேர்ந்தது.



ஆயிரம் நா படைத்த ஆதி சேடனுலும் அளவிட்டுச் சொல்லமுடியாத சோதிப்பிர காசத்துடன் காட்சியளித்த நிர்மல அன்னைக்கு நிகரில்லா அருள்களை வாரிவழங்கிய இறைவன் அவளைப் பரலோக பூலோக ராசேஸ்வரியாகவும் திருமுடி சூட்டினுர். ஆணவம் கொண்ட அலகையின் தலை மிதித்த வீரிய நெஞ்சமுள்ள வெற்றியின் நாயகியே, போர் க்களத்தில் அஞ்சாத ஜூதித் தீரே, செனையோனின் துள ளிய கம்பளமே, மோயீசின் முட்செடியே, ஆரோனின் துளிர்விடும் கோலே, சென்ம பாவக் கறையும், கர்மபாவப் பட்டையும் அணுகாத அன் பின் அரசியே! பாராளும் மன்னர் எல்லாம் முடிசாய்த் து வணங்கப் பாக்கியம் பெற் றவளே, விண்ணும் மண்ணும் உய்யவந்த பேருபகாரியே! உமது பிறப்பால் உறங்கிக் கிடந்த மனித சமுதாயம் விழித்துக்கொண்டது. அன் பின் இராக்கினியே நீர் பிறந் திராவிட்டால் எமக்கு ஈடேற் றம்தான் ஏது? மந்திர மணி மாலை தான் ஏது? அருள் நிறைந்த மரியாயே! என்ற செபம்தான் ஏது? உமது ஒப்பற்ற உற்பவத்தால் இரு ளில் மூழ்கிக்கிடந்த பரந்த சமுதாயம் ஒளியில் நடமாட அருள்பெற்றது. மாமரியே, எங்கள் தாய்மரியே அருள் நிறைந்த கிருபாகரியே! சீறு கொண்டு சிங்கம்போல எழுந் த தீய சக்திகளை யெல்லாம் வென்று வெற்றிமாலை சூடிய செல்வியே! உமது நாமம் என்றும் எப்போதும் புகழ் பெற வேண்டும். தீராதவேத னைகள், கஷ்டங்கள் எங்களுக் கு வந்திடுங்கால் தஞ்சமென் ருேடிவரும் எம்மை இருகை கொண்டு அரவணைத்து ஆறு தல் நல்கும் உமது கருணை யின் பெருமைதான் எம்மாத் திரம்.

சோர்வுற்று, செயலற்று தன்னந்தனியே யாருமில்லா இடந்தனிலே இருக்குங்கால் எமக்கு அன்னைக்குரிய அன் புடன் அமைதிதந்து எமது வாழ்க்கைப் படகை நல்வழி யே கொண்டுசெலுத்த என் றும் உதவியளித்திடும் தயை யின் பெருமை சொல்லுந்தர மன்று. அம்மணியே சீர் வெய்யோனை ஆடையாய் அணிந்த மாதரசியே! மாசி ன்றி சென்மித்த மகிமையின் ஆண்டவளே, மாணிக்க வை டூரிய மணிமண்டபமே, காரி ருள் ஓட்டி பேரொளி காட் டும் தாரகையே, நீர் மாசின்றி சென்மித்ததிருநாளைக்கொண் டாடும் நாம் உமது ஒப்புயர் வற்ற பிறை பொற்பாத கம லங்களில் மண்டியிட்டு, தா யில்லாப் பிள்ளைகள்போல அந் தரிக்கும் எமக்கு நல்வழிகாட் டிட வேண்டுமென்று இறைஞ் சுகின்ருேம்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## அறிவித்தல்

### யாழ்ப்பாண மேற்றிராசன சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாண மேற்றிராசன சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 1969-ம் ஆண்டு மார்கழிமாதம் 23-ந் தேதி செவ்வாய்க்கிழமை (போயாதினம்) நடைபெறும். காரிய திட்டம் பின்வருமாறு:

காலை 9-15: யாழ்ப்பாண ஆசனக்கோவிலில் மேற்றிராணியாரின் திவ்விய பூசை.

காலை 10-00: சம்பத்திரிசியார் கல்லூரி மத்தியூஸ் கட்டிடத்தில் வருடாந்த பொதுக்கூட்டம்.

**பொதுக்கூட்ட நிகழ்ச்சிநிரல்**

1. கடந்த வருடாந்த பொதுக்கூட்டக் குறிப்புகள்.
2. வருடாந்த அறிக்கை.
3. மேற்றிராணியாரின் உரை.
4. சங்க உத்தியோகஸ்தர் உட்பட நிர்வாக சபையைத் தெரிவுசெய்தல்.
5. வண. என். எம். சவரிமுத்து சுவாமியார் கருத்துரை.
6. ஐந்து நாட்களுக்குக் குறையாத முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட வேறேதேனும் கருமங்கள்.

பொதுக்கூட்டம் முடிந்தவுடன் புதிய நிர்வாகசபை கூடும்.

அங்கத்தினர் அனைவரும் சமுகமளிக்கும்படி தயவாகக் கேட்கப்படுகின்றனர்.

எஸ். எம். ஜே. லூயிஸ்,
செயலாளர்.

தபால்பெட்டி 2,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. [illegible] அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ மார்கழிமீ 6 ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கத்தோலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org